(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. பா.மு. முபாரக்.*

திரு. பா.மு. முபாரக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1999-2000 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 23, 24 மற்றும் 25 ஆவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.

(ஆ) கோரிக்கை எண் 30 - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

(அ) கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 31—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.156,32,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1937, திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கும் கடன் தொகை ஆண்டுக்கு 4 முறை மனு செய்தோருக்கு வழங்க வேண்டியதன்*